A

# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121 (1) ஆம் உறுப்புரைக்கமைய உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட “**கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு**” என்னும் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதையிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

“**கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு**” என்னும் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் அரசியலமைப்புக்கு அமைவாக இருத்தல் பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் பின்வருமாறு:-

(i) **சட்டமூலத்தின் வாசகங்கள் 3(6), 30 (3) இரண்டாம் காப்பு வாசகம், 55(2) மற்றும் 58(1) ஆகியவற்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(ii) **சட்டமூலத்தின் வாசகங்கள் 3(5) காப்பு வாசகம், 3(7), 6(1)(ஆ), 30(3) முதலாவது காப்பு வாசகம், 71(1) மற்றும் 74 (பொருள்கோடல் “ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு”) ஆகியவற்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(iii) **சட்டமூலத்தின் வாசகங்கள் 3(4), 6(1)(ப), 68(1)(ஊ) மற்றும் 68(3)(அ) ஆகியவற்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4 ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 76 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடனும் 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டாலும் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(iv) **சட்டமூலத்தின் வாசகங்கள் 52(5) மற்றும் 72(2)(ஞ) ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 52(3) ஆம் வாசகத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 3, 4 மற்றும் 76 ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 148 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடனும் 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டாலும் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(v) **சட்டமூலத்தின் வாசகங்கள் 30(1), 33(1), 40(2) மற்றும் 71(2)(ஐ) ஆகியவற்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 14(1)(ஏ) ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(vi) **சட்டமூலத்தின் வாசகம் 53(3)(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் 52(2)(ஆ) ஆம் வாசகத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 3, மற்றும் 4 ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 76 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடனும் 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டாலும் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(vii) **சட்டமூலத்தின் வாசகங்கள் 60(இ) மற்றும் வாசகம் 60(ஊ) ஆகியவற்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்.

(viii) **சட்டமூலத்தின் வாசகம் 37இன் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14(1) (எ) ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே வலிதாக நிறைவேற்றப்பட முடியும்.**

ஆயினும், அத்தகைய அதிகார இடப்பரப்பிற்கு வெளியே ஆனால் இலங்கையின் ஆள்புலத்தினுள்ளே நடத்தப்படும் ஒத்த வியாபாரங்களுக்கு தடையாக, கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிற்கு வெளியே வியாபாரத்தில் ஈடுபடும்போது இந்த சட்டமூலத்தின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஆள் பயன்படுத்துவதைத் தடுக்கும் புதிய உப வாசகமொன்று சட்டமூலத்தின் வாசகம் 37 இற்கு சேர்க்கப்பட்டால் சொல்லப்பட்ட ஒவ்வாமை இல்லாதொழியும்.

சட்டமூலத்தின் எஞ்சியுள்ள வாசகங்கள் அரசியலமைப்புடன் ஒவ்வாததாக இல்லையென உயர்நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

இன்றைய தினத்தின் நடவடிக்கைகளின் அதிகாரபூர்வ அறிக்கையுடன் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் அச்சிடப்பட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.